**விவசாயம், கால்நடை வளங்கள்**
**காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

# நெல் சந்தைப்படுத்தல் சபையின் பதவி வெற்றிடங்கள்

நெல் சந்தைப்படுத்தல் சபையின் வலையமைப்பு நிர்வாகி பதவிக்காக கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## வலையமைப்பு நிர்வாகி - (JM 1-1) - பதவிகள் 01

(அ) வெளி விண்ணப்பதாரிகளைச் சேர்த்துக் கொள்ளல் (கீழ்க்காணும் தகைமைகள் 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4 அல்லது 5)

**தகைமைகள்:**

1. பதவியுடன் இணைந்த பாடத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம்/ வலையமைப்பு நிர்வாகம் பற்றிய பட்டம் தகைமையைப் பெற்றுக் கொண்ட பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம்/ சபை அல்லது நியதிகள்/ வணிக நிறுவனத்தில் ஒருவருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்
2. பதவியுடன் சம்பந்தப்பட்ட பாடத்துறையில (கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம்/ வலையமைப்பு நிர்வாகம்) பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் உள்ளக இடைக்கால பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் குறித்த பாடத்துறையில் ஒரு வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்
3. மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) ஏழாம் (07) மட்டத்திற்கு குறையாத திறன் சான்றிதழை கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம்/ வலையமைப்பு நிர்வாகம் சம்பந்தமாக பெற்றுக் கொண்ட பின்னர் ஒரு வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்
4. மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) ஆறாம் (06) மட்டத்திற்கு குறையாத மட்டத்தின் திறன் சான்றிதழொன்றை கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம்/ வலையமைப்பு நிர்வாகம் சம்பந்தமாகப் பெற்றிருத்தல்

   **மற்றும்**

   தகைமைகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் அரச அரச கூட்டுத்தாபனம்/ சபை நியதிகள் வணிக நிறுவனத்தில் குறைந்த பட்சம் குறித்த துறையில் ஐந்து (05) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்
5. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பம்/ தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத திறன் சான்றிதழை கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம்/ வலையமைப்பு நிர்வாகம் பற்றி பெற்றிருத்தல்

   **மற்றும்**

   தகைமைகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் அரச, அரச கூட்டுத்தாபனம் சபை, நியதிகள் நிறுவனத்தில் குறைந்த பட்சம் குறித்த துறையில் பத்து (10) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**(ஆ) உள்ளக விண்ணப்பதாரிகளைச் சேர்த்துக் கெள்ளல்**

(கீழ்க்காணும் 1 அல்லது 2 அல்லது 3)

1. மேற்படி வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளை பூர்த்தி செய்தல்
2. முகாமைத்துவ உதவியாளர்

   தொழில்நுட்பம் அல்லாத (MA 1) சேவை வகுதியில் IIம் தரத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் பதவியொன்றில் குறைந்த பட்சம் ஐந்து (5) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்
3. தொழில் நுட்பத் துறையுடன் சம்பந்தப்பட்ட பதவியொன்றுடன் சம்பந்தப்படும் போது

   முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் (MA 2) சேவை வகுதியில் 11ம் தரத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் பதவியென்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**(ஆ) சம்பள முறை:-**

JM 1-1-2025 - ரூ (72,650 - 10x1360 18x2040 - 122,70)

(2025.03.25ம் திகதிய 1/2025 இலக்கம் கொண்ட முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2026ம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட சம்பளக் கட்டத்தில் நிலைநிறுத்தப்படும்.

**(இ) வயதெல்லை**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ள விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**(ஈ) வேறு தகைமைகள்**

**சகல விண்ணப்பதாரிகளும்**

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
- பதவிக்காக ஒப்படைக்கப்படும் வேலைகளை முறையாக நிறைவேற்றுதல் போலவே நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**பொதுவான விடயங்கள்**

- இப் பதவி நிரந்தரமானது ஊழியர் சேமலாப நிதிக்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு உரித்துரிமையுடையது
- விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு விண்ணப்பிக்கும் முகமாக தேவையான தகைமைகள் சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- தற்போது அரச நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் நிறுவனத்தின் தலைமையூடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
- சுயதரவு தகவல்கள் அடங்கிய தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை கல்வி மற்றும் தொழிற் தகைமைகளை உறுதி செய்த ஆவணங்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் உறவினரல்லாத இருவரின் தகவல்கள் உள்ளடங்கலாக 2026.10.09ம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வு மற்றும்/ அல்லது எழுத்து மூல போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் படி ஆட்சேர்ப்பு இடம்பெறும்.
- நியமனம் பற்றிய வற்புறுத்தல் மேற்கொள்ளல்/ பிழையான தகவல்களை சமர்ப்பித்தல் தகைமையற்றவராவதற்கு காரணமாகும்.
- நியமனம் பற்றிய இறுதித் தீர்மானம் நெல் சந்தைப்படுத்தல் சபையின் பணிப்பாளர் சபைக்கு உரியது.

**தலைவர்,**
**நெல் சந்தைப்படுத்தல் சபை,**
**வீடமைப்பு செயலகக் கட்டிடம், 6ம் மாடி,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு -02.**